1989 ஏப்ரல் 4] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

500 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இந்த கைதுகள் தொடராமல் இருக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 25ஆம் தேதி சட்டமன்றத்தில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களையொட்டி நாங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் குறிப்பிட்டதைப் போல அதற்குப் பொறுப்பு ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ராஜினாமா செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச செய்தனர்.)

5. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

சென்னையில் வீட்டு வசதி வாரிய மனை ஒதுக்கீடு, அடுக்கு மாடிக் கட்டிட அனுமதி ஆகியவற்றில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: 110-வது விதியின்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைப் படைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதித் துறை எம்.எம்.டி.ஏ., விதிகளை மீறி அனுமதி வழங்கியதில் உள்ள ஒழுங்கீனங்களைப் பற்றிய அறிவிப்பு: சென்னை நகரத்தில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேவையான அனுமதிகளை வழங்குவதில் 1986-87 ஆம் ஆண்டுகளில் அதிக அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், மக்களின் பாதுகாப்பிற்கும், நல்வாழ்விற்கும் தேவையான அடிப்படை வசதிகள் பற்றிய சட்ட விதிகளைத் (எம்.எம். டி.ஏ. ரூல்ஸ்) தளர்த்தி பலருக்கு முறைகேடான அனுமதிகளை அன்றைய அந்தத் துறையின் அமைச்சர் வழங்கியுள்ளார் என்றும், கட்டிட விதிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (எம்.எம். டி.ஏ.) மற்றும், அரசு செயலாளர் பரிந்துரை செய்யாமல் ஆட்சேபணை தெரிவித்த பலஅடுக்குமாடிக்கட்டிடங்களுக்கு அமைச்சர் தன்னிச்சையாக எந்தக் காரணமும் இன்றி விதிகளைத் தளர்த்தி அனுமதி தந்து உத்தரவிட்டுள்ளார் என்றும் (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பில் அறிவிப்பு.......(கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் பேசும் போது, அறிக்கை படிக்கும்போது இடையிலே யாரும் பேசுவதற்கு வாய்ப்பே கிடையாது. (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடுமையான கண்டனங்கள் பொது மக்களிடமிருந்து எழுந்தன. (கூச்சல்-குழப்பம்) குடியிருப்புப் பகுதியில் கடைகள், ஓட்டல்கள், லாட்ஜ்கள் மற்றும் வியாபாரக் கட்டிடங்கள் (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த அலுவல். 1989–90 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது..........

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......... (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒவ்வொரு நாளும் இதேப் பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருந்தால் எப்படி? இப்போது நீங்கள் உட்கார முடியுமா, முடியாதா ? (கூச்சல்-குழப்பம்). அறிக்கையைப் படிக்கட்டும், அறிக்கையைப் படித்த பிறகு உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். அறிக்கை படிக்கும்போது குறுக்கே பேச முடியாது. (கூச்சல்-குழப்பம்) 110-வது விதியின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை படிக்கிறபோது வேறு யாரும் குறுக்கே பேச முடியாது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று பேசிக்கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் விதிகளின் கீழே கட்டுப்படவில்லையென்றால் நான் உங்களை மறுபடியும் வெளியேற்ற வேண்டியிருக்கும். (கூச்சல்-குழப்பம்).

I request the Members of the All–India Anna D.M.K. to withdraw from the House. (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : இதே வேலைதானா தினமும். (கூச்சல்–குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே வேலை யாருக்கு ? (கூச்சல்-குழப்பம்) அவர்களை வெளியேறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளியேறாமல் நின்று கொண்டே இருந்தனர்.)

1989 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சார்ஜண்ட், வாட்ச் அண்டு வார்ட் வந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றுமாறு ஆணையிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்).

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து பேரவைக் காவலர்களால் வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர்.) (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் தயவு செய்து உட்காருங்கள். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படைப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 110-வது விதியின்படி பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருளைப் பற்றி ஒரு அமைச்சர் பேரவைத் தலைவரின் இசைவுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம் என்ற 110-ஆவது விதியின் கீழ்தான் இதைப் படிக்கிறேன்.

சென்னை நகரத்திலே புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்குத் தேவையான அனுமதிகளை—இதுகூட கவர்னர் குரானா அவர்களிடத்திலே கொடுக்கப்பட்ட புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையொட்டிய அறிக்கையைத்தான் படிக்கிறேன். சென்னை நகரத்தில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேவையான அனுமதிகளை வழங்குவதில் 1986—87ஆம் ஆண்டுகளில் அதிக அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், மக்களின் பாதுகாப்பிற்கும், நல்வாழ்விற்கும் தேவையான அடிப்படை வசதிகள் பற்றிய சட்ட விதிகளை (எம்.எம்.டி.ஏ. ரூல்ஸ்களை) தளர்த்திப் பலருக்கு முறைகேடான அனுமதிகளை அன்றைய அந்தத் துறையில் அமைச்சர் வழங்கியுள்ளார் என்றும் நான் பெயரைக் கூடச் சொல்லவில்லை—அந்தத் துறையின் அமைச்சர் வழங்கியுள்ளார் என்றும், கட்டிட விதிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (எம்.எம்.டி.ஏ.) மற்றும், அரசு செயலாளர் பரிந்துரை செய்யாமல் ஆட்சேபணை தெரிவித்த பல அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கு அந்த அமைச்சர் தன்னிச்சையாக எந்தக் காரணமும் இன்றி விதிகளைத் தளர்த்தி அனுமதி தந்து உத்திரவிட்டுள்ளார் என்றும் கடுமையான கண்டனங்கள் பொது மக்களிடமிருந்து எழுந்தன. குடியிருப்புப் பகுதியில் கடைகள், ஓட்டல்கள், லாட்ஜ்கள் மற்றும் வியாபாரக் கட்டிடங்கள் கட்டவும், ஏற்கனவே நெருக்கடியான, குறுகிய சாலைகள் உள்ள இடங்களில் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் முறைகேடாகப் பெருமளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுபற்றி சென்னையிலே உள்ள நுகர்வோர் நடவடிக்கைக் குழு (கன்ஸ்யூமர் ஆக்ஷன் குரூப்) உச்ச நீதி மன்றத்திலே வழக்கு ஒன்றும் தொடர்ந்தது.

இதற்கிடையில் திருவாளர்கள் வலம்புரி ஜான், ஏ.சி. சண்முகம், ஜகத்ரட்சகன் ஆகிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், வீட்டு வசதித் துறை அமைச்சர் புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதிகள் வழங்க உத்தர விடுவதில் பெருமளவு ஊழல்கள் புரிந்துள்ளார் என்று அப்பொழுது இருந்த கவர்னர் திரு. குரானா அவர்களிடம் மனு ஒன்றை அளித்தார்கள். அந்த மனுவின் மீது விஜிலன்ஸ் கமிஷனர் விசாரணை செய்ய ஆளுநராக இருந்த மேதகு குரானா அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

மேலும் 180 என்.எஸ்.சி. போஸ் ரோட்டில் வசிக்கும் திரு. எஸ். கிருஷ்ணன் என்பவரும் தனது வீட்டுக்கு அருகில் உள்ள மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு திரு. வி. தாயாராம் மற்றும் திரு. வி. சிமன்தாஸ் இருவருக்கும் அனுமதி வழங்குவதில் அமைச்சர் முறைகேடாக உத்தரவு இட்டிருக்கிறார் என்று முறையிட்டு, அதுகுறித்து விசாரிக்கும்படி கேட்டிருந்தார். அந்த மனுவின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(முற்பகல் 10-50)

கவர்னர் குரானா விடுத்த உத்தரவையொட்டி இதுபோன்ற பொதுநல விரோத நடவடிக்கைகளைக் களைந்திட ஆர்வம் கொண்டுள்ள இன்றைய இந்த அரசு இதுபற்றி விரிவாக ஆய்வு செய்ததில் கீழ்க்கண்ட உண்மைகள் புலனாகியுள்ளன:—

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் வீட்டுவசதித் துறையால் பரிந்துரை செய்யப்படாமலிருந்தும் அமைச்சர் தன்னிச்சையாக உத்தரவிட்ட அயிட்டங்கள்.

21-10-1986 முதல் 30-11-1987 வரை	.	124 அயிட்டங்கள்
1-12-1987 முதல் 24-12-1987 வரை	.	17 அயிட்டங்கள்
25-12-1987 முதல் 6-1-1988 வரை	..	33 அயிட்டங்கள்
7-1-1988 முதல் 29-1-1988 வரை	.	7 அயிட்டங்கள்
மொத்தம்	..	181 அயிட்டங்கள்

இந்த 181 இனங்களில் 174 இனங்கள் ஒருவர் அந்தத் துறையின் அமைச்சராக இருந்தபோது உத்தரவு போட்டவைகளாகும்.

எம். ஜி. ஆர். மறைந்த நான்காவது நாளான 28-12-1987ல் 2 அடுக்குமாடிக் கட்டிடங்களுக்கும்; 5ஆவது நாளான 29-12-1987-ல் 1 அடுக்குமாடிக் கட்டிடத்திற்கும்; 30-12-87-ல் 1 அடுக்குமாடிக் கட்டிடத்திற்கும்; 31-12-1987-ல் அதாவது அந்த அமைச்சர் தனது பதவிக் காலத்தில் கையொப்பமிட்ட கடைசி நாளில் மட்டும் ஒரேயடியாக 29 அடுக்குமாடிக் கட்டிடங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்; இந்த விதிகளை எல்லாம் மீறி உத்தரவிட்டுள்ளார்.

மொத்தமாக, அவர் அந்தத் துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகித்த காலத்தில், அதாவது 21-10-1986 முதல் 31-12-1987 வரை 174 அயிட்டங்களில் எம்.எம்.டி.ஏ. மற்றும் வீட்டுவசதித்துறை ஆகியவற்றின் ஆட்சேபணைகளைப் புறக்கணித்து தன்னிச்சையாக, முறைகேடாக உத்தரவிட்டுள்ளார்.

'' இன்னின்ன காரணங்களுக்காக அனுமதி மறுக்கப்படுகிறது'' என்று தெள்ளத் தெளிவாக எம்.எம்.டி.ஏ.-யும் வீட்டுவசதித் துறையும் எழுத்துப் பூர்வமாக கோப்புகளில் விளக்கியிருந்தும்கூட, பெருமளவுக்கு முறைகேடான உத்தரவுகள் அந்த அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

திரு. எஸ். கிருஷ்ணன் என்பவர் அன்றைய கவர்னர் குரானா அவர்களிடம் கொடுத்த மனுவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கவர்னர் அலெக்சாண்டர் ஆட்சியில் இதுகுறித்து முன்னாள் அட்வகேட் ஜெனரல் திரு. கிருஷ்ணமூர்த்தியிடம் 10-11-1988 அன்று சட்டக் கருத்து (லீகல் ஒப்பினியன்) பெறப்பட்டுள்ளது. அதன்படி '' விதிகளைத் தளர்த்தி முன்னாள் அமைச்சர் எடுத்த முடிவுகள் எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் அமையவில்லை—அவ்வாறு காரணம் குறிப்பிடாமல் பிறப்பிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரின் ஆணைகள் தன்னிச்சையானது—சட்டப்படி செல்லத்தக்கதாகாது. இதுபோன்ற அதிகாரங்களைப் பயன்படுத்துவது முறைகேடானது என்று அறிவிக்கப்பட வேண்டும் '' என்று அட்வகேட் ஜெனரல் கிருஷ்ணமூர்த்தி கருத்துக் கூறியுள்ளார். அட்வகேட் ஜெனரல் கூறியக் கருத்தை அப்படியே ஆங்கிலத்திலே கூறவேண்டுமென்றால்,

" The Ex-Minister's decision to relax the rules is not supported by any reason...........

In the absence of any such reasoning it has necessarily to be held that the decision of the Ex-Minister as found in the file is arbitrary and cannot stand the test referred to above. The exercise of such power by an authority would have to be declared as irregular."

இப்படிப்பட்ட காரியங்களால் கீழ்க்கண்ட பொதுநலக் கேடுகள் விளைந்துள்ளன :—

(1) பல குடும்பங்கள் வசிக்கின்ற நெரிசலான நிலையில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கு பாதுகாப்பு விதிகளை மீறி அனுமதி அளித்ததால் தீ விபத்து மற்றும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு சாலை விபத்துக்கள் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

(2) அடுத்தடுத்த நெருக்கமான பலமாடிக் கட்டிடங்களுக்கு தேவையான இடைவெளியும் திறந்த வெளியும் ஒதுக்கப்படாமல் அது சம்பந்தப்பட்ட அவசியமான விதிகளைத் தளர்த்தி தனியார் பலருக்கு உதவிடும் வகையில் உத்தரவிட்டதில் போதிய காற்றோட்டம், சூரிய வெளிச்சம் போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்காமல் போவதுடன் அந்த வட்டாரத்தில் வாழ்வோரின் "பிரைவசி" யும் பாதிக்கப்படுகிறது.

(3) குடிதண்ணீர் விநியோகம், கழிவுநீர் அகற்றுதல் முதலிய அடிப்படை வசதிகள் பாதிக்கப்படும் அளவுக்கு ஏற்கெனவே நெருக்கமாக குடியிருப்புகள் உள்ள பகுதிகளில் மேலும் மேலும் அதிக அளவு அடுக்கு மாடிக் கட்டிடங்களை விதிகளை மீறி அனுமதித்ததன் மூலமாக மக்களின் ஆரோக்கியமான வாழ்வு சிதைந்து விட்டது.

அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் வலம்புரி ஜான், ஏ. சி. சண்முகம், ஜகத்ரட்சகன் ஆகியோர் கொடுத்திருந்த மனுவின்பேரில் முன்பு ஆளுநராக இருந்த திரு. குரானா அவர்களே இதுபற்றி விஜிலன்ஸ் கமிஷனர் விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்.

அதையொட்டி இந்த அரசு முன்னாள் அமைச்சர் செய்த அடுக்குமாடிக் கட்டிட ஊழல் குறித்து உகந்த விசாரணையை மேற்கொள்ளும் என்று இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய வீட்டுவசதித் திட்டங்களை உருவாக்கும்போது மொத்த பரப்பளவில் 10 சதவீதம் பூங்கா, சமூகக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக்கூடம், கடைகள் முதலிய பொது நோக்குக் காரியங்களுக்காக ஒதுக்குவது என்று விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற பகுதிகள் மேற்கண்ட விதிகளுக்கு மாறாக வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு 1986 மற்றும் 1987ஆம் ஆண்டுகளில் அதிக அளவில் தனியாருக்கு ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளதென்று பொதுமக்கள் கண்டனம் தெரிவித்தனர். இதுபோன்ற பொது நோக்குக் காலியிடங்களை வீட்டு மனைகளாக மாற்றம் செய்து, சம்பந்தப்பட்ட துறையின் அன்றைய அமைச்சரே அவருடைய தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பயன்

அண்ணா நகரில் காங்கிரஸ் ஆட்சியில் துவக்கப்பட்ட தொழிற் கண்காட்சி 1967-ல் பேரறிஞர் அண்ணா காலத்தில் திறந்து வைக்கப்பட்டது நினைவு இருக்கலாம். அதன் நினைவுச் சின்னங்களாக ஒரு கோபுரமும் மற்றும் சிலைகளும், பூங்காக்களும் இன்னும் இருந்து வருவது நினைவிருக்கலாம். இதுபோன்று சமூகக்கூடம், அந்த வட்டாரப் பொதுமக்களுக்குப் பயன்படும் மருத்துவமனை, பள்ளிக்கூடம், பூங்காக்கள் போன்றவைகளை உருவாக்குவதற்காக ஆங்காங்கே காலியாக விடப்பட்டிருந்த சுமார் 302 கிரவுண்டுகளை வீட்டுமனைகளாக மாற்றி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இப்படித் தனியாருக்கு விநியோகம் செய்யப்பட்ட 240 பிளாட் அதாவது 302 கிரவுண்டுகளும் இன்று சென்னை மாநகரத்திலேயே மிக அதிகமான ரூபாய்க்கு விற்பனையாகக்கூடிய அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், பெசன்ட் நகர், இந்திரா நகர் போன்ற "போஷ் லொக்காலிட்டி"யில் இருப்பவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதிலிருந்தே இந்த வீட்டு மனைகளின் விலை மதிப்பை மாண்புமிகு உறுப்பினர்களும், தமிழக மக்களும் ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம்.

மார்க்கெட்டுக்காக ஒதுக்கப்பட்டவை ..	17 பிளாட்
கடைகளுக்காக ஒதுக்கப்பட்டவை ..	50 பிளாட்
பொதுக் காரியத்திற்காக ஒதுக்கப்பட்டவை ..	26 பிளாட்
வியாபாரப் பகுதிக்காக ஒதுக்கப்பட்டவை ..	22 பிளாட்
திறந்த வெளிக்காக ஒதுக்கப்பட்டவை	17 பிளாட்
கிணறுக்காக ஒரு பிளாட்	
பள்ளிக்கூடத்திற்காக	2 பிளாட்
வாகனங்கள் நிறுத்துமிடத்திற்காக	8 பிளாட்
தொழில் பள்ளிக்கூடங்களுக்காக ..	13 பிளாட்
நலிவடைந்தோருக்கான வீடுகளுக்காக	17 பிளாட்
புதிதாக ஒதுக்கப்பட்டவை	35 பிளாட்
சமூகக்கூடத்திற்காக ஒதுக்கப்பட்டவை	13 பிளாட்
குடியிருப்புப் பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்டவை ..	8 பிளாட்
பூங்காக்களுக்காக ஒதுக்கப்பட்டவை	4 பிளாட்
மருத்துவமனைக்காக ஒதுக்கப்பட்டவை ..	7 பிளாட்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மொத்தம் 240 பிளாட்டுகள், ஆக மொத்தம் 302 கிரவுண்டுகளை விதி முறைகளைக் கடைப்பிடிக்காமல் பெரும்பாலான ஒதுக்கீடுகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் செயற் பொறியாளர்கள் (எக்சிகியூட்டிவ் என்ஜினியர்கள்), அமைச்சருடைய வெறும் வாய்மொழி உத்தரவைப் பெற்றதன் மூலமே வீட்டு வசதி வாரியம் மூலம் அரசுக்கு காலியிடங்களை வீட்டுமனைகளாக மாற்றுவது குறித்து அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது இவ்வாறு அறிக்கைகள் அனுப்பப்படுவதற்கு முன்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் (எம்.எம்.டி.ஏ.) அனுமதி எதையும் பெறவில்லை. அவசர அவசரமாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் செயற் பொறியாளர்களிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டு உடனுக்குடன் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு ஒதுக்கீட்டில்கூட, இன்னாருக்கு ஒதுக்கீடு செய்யலாம் என்று வீட்டு வசதி வாரியம் பரிந்துரை செய்யவில்லை.

இந்த 240 பிளாட்டுகளில், 43 நபர்கள் வீட்டுவசதி வாரியத்திடமிருந்து (நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிகேட்) அதாவது ஆட்சேபணையில்லாத சான்றிதழைப் பெற்று கட்டிடம் கட்டும் வேலையைத் துவங்கிவிட்டனர். மீதமுள்ள 197 நபர்கள் இன்னும் கட்டிடம் கட்டத் துவங்கவில்லை.

உதாரணத்திற்கு, இதுபோன்ற 52 இனங்களை ஆய்வு செய்ததில் ஏராளமான ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரே நபருக்கு 2 ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதும், ஏற்கெனவே வீடு உள்ளோருக்கு மீண்டும் வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும் விசாரணையில் கண்டறியப்பட்டது.

அன்றைய அரசின் அல்லது அமைச்சரின் அலாதி அன்பைப் பெற்ற சில வி.ஐ.பி.-க்களின் பெயர்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் திருமதி பானுமதி தம்பிதுரை. திரு. தம்பித்துரை, எம்.பி. அவர்களின் துணைவியார். இது மருத்துவமனைக்காக உரிய பகுதியல்ல. இது மாற்றப்பட்டு அதுவும் $7\frac{1}{2}$ கிரவுண்டு அண்ணா நகரில் 24—7—1987-ல் இவருக்கு ஒதுக்கப்படுகிறது.

இன்னொருவர் டாக்டர் திருமதி நற்குணம். இவருக்கும் சுமார் $7\frac{1}{2}$ கிரவுண்டு பெசன்ட் நகரில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலம் அந்த வட்டார மக்களுக்குத் தேவையான மார்க்கெட் ஒன்று கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதையும் மாற்றி இவருக்குத் தரப்பட்டுள்ளது. இதுபோன்ற பல பெயர்கள் உள்ளன. பொதுவாக வீட்டு வசதி வாரியத்தில் வீடு கட்டுவதற்கு 2 அல்லது $2\frac{1}{2}$ கிரவுண்டுகள்தான் தருவது வழக்கம். விதிகளை மீறியதுமல்லாமல் ஏழரை கிரவுண்டுகள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே கலைஞர் கருணாநிதி நகரில் அந்த வட்டார மக்களுக்கு உதவும் வகையில் கடைகள் கட்டுவதற்காக ஒதுக்க பட்டிருந்த இடம் அ.இ.அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் திரு. கருப்பசாமி பாண்டியனுக்கும், திரு. கோவைத்தம்பிக்கும் வீடு கட்டுவதற்கு என்று வழங்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-00)

இவ்வாறு முறைகேடாக தரப்பட்டுள்ள 302 கிரவுண்டில் உள்ள 240 பிளாட்களின் மார்க்கெட் விலை சுமார் 13 கோடி ரூபாய்.

இதன் பின்னணியில் இந்த 240 பிளாட்டுகள் ஒதுக்கீடு தொடர்பாக விரிவாக விசாரணை செய்து நடைபெற்ற வீட்டு மனை ஒதுக்கீடு ஊழல் குறித்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு இவ்வரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(1) ஒதுக்கீடு பெற்றோர்கள் அனைவரும் வீட்டுமனை பெறத் தகுதி உள்ளவர்களா என்பதை விசாரித்து, தகுதியற்ற வர்கள் ஒதுக்கீடு பெற்றிருப்பின், அவ்வொதுக்கீடுகளை உடனடி யாக ரத்து செய்ய வேண்டும்.

(2) இந்த மனைகளில் முறையான விசாரணையின்றி வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது.

(3) ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட, பூங்கா, சமூக கூடம் போன்ற பொதுநோக்குக் காலியிடங்களை வீட்டுவசதி வாரியம் திரும்பப் பெறவேண்டும்.

இந்த ஆணையை நிறைவேற்ற வீட்டுவசதி வாரியம் உடனடி யாக உரிய விசாரணை நடத்தி ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டும். அதனையொட்டி இந்த வீட்டுமனை ஒதுக்கீட்டு ஊழல்கள் புரிந்தோர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைச் சொல்லி இந்த அறிக்கையை அவையில் வைக் கிறேன்.

6. அவையில் பயன்படுத்தப் பெற்ற சில சொற்கள் குறித்துத் தலைவரின் குறிப்புரை

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மக்களுடைய ஆதரவாலும், இறைவனுடைய திருவருளா லும் ஒரு முறை பாராளுமன்ற உறுப்பினராகவும், மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகவும் வந்திருக்கிறேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன், எதைச் சொல்ல விரும்பு கிறேன் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்